மாண்புமிகு உறுப்பினரவர்களும் அக்கறை கொள்ள வேண்டும். நிலம் கையகப்படுத்துகின்ற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினரவர்களும் ஒத்துழைப்பு தர வேண்டும்.

திரு. எம். பூபதி: மாண்புமிகு அமைச்சரவர்கள் 4, 5 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட அந்த வீடுகளைப்பற்றிச் சொன்னார்கள். இப்பொழுது 4,000-க்கு மேற்பட்ட அரிசன மக்கள் குடிசைகளில் வாழ்கிறார்கள். அவர்களுக்காகத் தக்க நடவடிக்கை எடுப்பார்களா, அதற்கு விளக்கம் கூறுவார்களா என்று அறிய விருமபுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அதைத் தான் இரண்டாவது முறையாகக் கூறும்பொழுது சொன்னேன். 4.12 லட்சம் ரூபாய் இந்த ஆண்டிற்காக நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம். அந்தத் திட்டத்தில் 940 ரூபாய்க்கு தனி வீடுகளும், 1,805 ரூபாய்க்கு இரட்டை வீடுகளும் என்ற திட்டமிருக்கிறது. மாவட்ட நல அதிகாரிகள் அதற்குரிய இடங்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். கட்டட வேலைகளும் சிலயிடங்களில் துவக்கப்பட்டிருக்கிறது. வேறு ஒரு கேள்வி போட்டால் எந்தெந்த மாவட்டத்தில் எத்தனையிடங்கள் கட்டியிருக்கிறோம் என்ற முழு விவரங்களைச் சொல்ல முடியும்.

அரிசன குடியிருப்புகளுக்கு பாதை வசதி

* 194 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் 1967 முதல் ஹரிஜனப் பகுதி மக்களிடமிருந்து பாதை வசதி கோரி கோரிக்கைகள் எவையேனும் வந்துள்ளனவா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஆம்.

இந்த மனுக்கள் பரிசீலனையில் உள்ளன.

முற்பகல் 9·30

திரு. நா. கிருட்டிணன்: இத்தகைய தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருப்புகளுக்குச் சாலை வசதி செய்து கொடுப்பதற்காக தனியார் நிலத்தைக் கையகப்படுத்தும் நிலைமை ஏற்படும்போது தனியார் நிலத்தைக் கொடுக்க மறுக்கிறார்கள். பொதுநோக்கத்தைக் காரணமாகக் கொண்டு கட்டாயமாக அந்த நிலங்களைக் கையகப்படுத்த அரசு முனைந்து செயல்படுத்துமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அப்படிப்பட்ட கட்டாய முறை இன்றைக்கும் இருக்கிறது. அந்த விதிமுறைகளின் கீழ் நிலங்களை எடுத்துக் கொள்ளும்போது அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் செல்லுகிறபோது அரசாங்கமும் வழக்கு மன்றத்திற்குச் சென்று வாதாடுகிறது.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: அரிசனங்கள் குடியிருப்புக்குப் போவதற்கு, மயானத்திற்குச் செல்லுவதற்கு வழி இல்லாமல் பல இடங்களில் நிலப் பிரபுக்கள் வேலி வைத்து அடைத்து

வைக்கிறார்கள். அந்த மாதிரி நிலங்களை எல்லாம் எடுத்து எங்கெங்கு அரிசனங்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் பாதை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இப்படிப்பட்ட சிக்கல்கள் அதிகமாகத் தெரிந்திருக்கும். பல இடங்களில் நிலச் சொந்தக்காரர்கள் அரிசனங்களுக்கு பாதை வசதி செய்து கொடுக்கவும், வேறுபல வசதிகளைச் செய்து கொடுப்பதற்கும் நிலங்களைக் கொடுக்க மறுக்கிறார்கள். அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் செல்லுகிறபோது காலதாமதம் ஏற்படுகிறது. அரசாங்கத்தைப் பொறுத்தவரை அவர்களுக்கு இந்த வசதிகளைச் சீக்கிரமாகச் செய்து கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தைத்தான் கொண்டிருக்கிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி: மூலக் கேள்வி மாயூரம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் அரிசன மக்களுக்குப் பாதை வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கோரிக்கைகள் வந்திருக்கின்றனவா என்பது. அதற்கு பரிசீலனையில் இருக்கிறது என்று பதில் சொன்னார்கள். இந்த அரிசன நல இலாகா எப்போதும் பிரிசீலனைதான் செய்து கொண்டிருக்குமா? திட்டவட்டமான முடிவு செய்வதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: நிலத்தைக் கையகப் படுத்துவதிலே சிக்கல்கள் இருக்கின்றன என்பது கேள்வி கேட்ட மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். அரிசனங்களுக்குப் பாதை வசதி செய்து கொடுக்க நிலத்தைக் கொடுக்க நிலச் சொந்தக்காரர்கள் மறுக்கிறார்கள். அந்த நிலையில் அந்த நிலச் சொந்தக்காரருக்கு ஆதரவாக ஸ்டே கேட்டு மாண்புமிகு உறுப்பினர்கள் அரசாங்கத்திடம் வருகிறார்கள். அவர்கள் இத்தகைய காரியங்களில் ஈடுபடாமல் இருப்பார்களானால் காலதாமதத்தைத் தவிர்க்க முடியும்.

திரு. நா. இராஜாங்கம்: அரசாங்கம் அரிசனங்களுக்கு நிலங்களை விலை கொடுத்து வாங்கிக் கொடுப்பதோடு புறம்போக்கு நிலங்களையும் கொடுக்கிறது. இதுமட்டுமல்லாமல் தனிப்பட்ட முதலாளிகளுடைய நிலத்தில் அரிசனங்கள் காலாகாலமாக, தலைமுறை தலைமுறையாக வீடு கட்டி இருந்து கொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட அந்த நிலங்களுக்கு அரசாங்கம் ஏதேனும் நஷ்ட ஈடு கொடுத்து வாங்கி அரிசனங்களுக்குக் கொடுக்க முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தனியார் நிலத்திலே வீடு கட்டிக் கொண்டிருப்பவர்களை வெளியேற்ற நடவடிக்கையில் ஈடுபட்டதாக இதுவரை அரசாங்கத்திற்கு எந்தவிதப் புகாரும் வரவில்லை. அந்த நிலங்களில் அவர்கள் எவ்வளவோ காலமாக குடியிருந்து வரும் நிலையில் அரசாங்கமே வலியச் சென்று அந்த நிலங்களுக்கு நஷ்ட ஈடு கொடுத்து எடுத்துக் கொள்வது என்றால் நிலச் சொந்தக்காரர்கள் அப்போது தங்களுடைய உரிமையை நிலைநாட்ட முன் வருவார்கள். சிக்கல்கள் ஏற்படும். நிலச் சொந்தக்காரர்கள் அங்கே குடியிருக்கும் அரிசனங்கள் அப்படியே

இருக்கட்டும், நிலம் தங்கள் பெயரில் இருக்கட்டும் என்று கருதுகிறார்கள். ஆகவே, அதை மாற்றிக் கொடுக்கவேண்டுமென்று முயற்சி எடுத்தால் வீண் தகராறுதான் ஏற்படும். அரிசனங்களுக்கு பறம்போக்கு நிலங்களைக் கொடுக்கவும், வேறு பல இடங்களைத் தனியார் நிலமாக இருந்தால் அவற்றை வாங்கிக் கொடுக்கவும் அரசு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டுதான் வருகிறது.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : அரிசன மக்கள் குடிதண்ணீர்க் கிணற்றுக்கும், மயானத்திற்கும் செல்வதற்கான பாதையில் தனிப்பட்டோர் நிலங்கள் இருக்கும் நிலையில் பாதை இல்லாத நிலையில் பல கிராமங்களில் கஷ்டப்படுகிறார்கள். இப்படிப்பட்ட இடங்களில் அந்த நிலங்களைக் கட்டாய ஆர்ஜிதம் செய்து அரிசனங்களுக்குப் பாதை வசதி செய்து கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அதைத் தான் நான் திருப்பித் திருப்பிச் சொல்லுகிறேன். அரசாங்கம் கட்டாயமாக எடுக்க முன்வரும்போது சச்சரவுகள் ஏற்படுகின்றன. அந்த நோக்கில் மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்கள் அந்தந்த இடத்தில் சமாதான முறையில் தேவையான காரியங்களுக்காக அரசாங்கம் எடுக்கிறது என்பதைக் கூறி, அந்த நிலங்களை வாங்கிக் கொடுத்தால் அரசாங்கத்திற்கு நலமாக இருக்கும். பல இடங்களில் நிலச் சொந்தக்காரர்கள் பக்கம் வாதாடுகிறார்களே தவிர, அரிசனங்களுக்காக வாதாடி அந்த நிலத்தை வாங்கிக் கொடுக்க முன் வருவதில்லை. சட்டமன்றத்தில் கேள்வி கேட்கின்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதியில் இந்த மாதிரி நில ஆர்ஜிதம் செய்யும்போது சமாதான முறையில் நிலத்தை வாங்கிக் கொடுக்க வழி வகை செய்தால் அரசாங்கம் மேற்கொண்டு நடவடிக்கைகளைக் காலதாமதமின்றி எடுத்துக் கொள்ள முடியும்.

Radio sets to best kept Harijan colonies

*195 *Q.*—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to offer radio sets to the best kept Harijan colonies in this State; and

(*b*) if so, the details thereof.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மிகத் தூய்மையாக வைத்துக்கொள்ளப்படும் அரிசனக் குடியிருப்புகளுக்குப் பரிசு வழங்கும் திட்டம் 1960–61 ஆம் ஆண்டிலிருந்தே செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வட்டத்திலும் (தாலூகாவிலும்) மிகவும் தூய்மையாக வைத்துக் கொள்ளப்படும் ஒவ்வொரு அரிசனக் குடியிருப்புக்கும் ரூபாய் முந்நூறு மதிப்புடைய ஒரு வானொலிப் பெட்டி அல்லது ஐந்து அம்பர் சர்க்காக்கள் பரிசாக வழங்கப்படுகின்றன.